**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

முன்னிலை. திரு.S.R.பாபு B.A., B.L.

நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு.

2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 10-ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு 1311/2025**

**CNR No-TNED 04-008351-2025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,<br>ஈரோடு தெற்கு காவல் நிலையம்.<br>குற்ற எண்.129/2025 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | ருக்குமணி, வயது 50/2025,<br>க/பெ. சங்கர்,<br>54 சாஸ்திரி சாலை, சூரம்பட்டி வலசு, ஈரோடு. |
| வனையப்பட்ட குற்றங்கள் | : | U/s. 4(1)(C) of TNP Amendment Act |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 12.05.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 12.05.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | 12.05.2025 – 12.05.2025 (Station Bail) |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 12.05.2025 (Station Bail) |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 29.10.2025 |
| BNSS பிரிவு 263-இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 22.04.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 03.06.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | : | 03.06.2026 |
| BNSS பிரிவு 348-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | : | Nil |
| BNSS .பிரிவு.351(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 04.06.2026 |
| தலைமறைவு எதிரிகள் குறித்த விவரம் | : | இல்லை |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு | : | இல்லை |



S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:28:18 +0530

| | | |
|---|---|---|
| விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | | |
| வழக்கு தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | : | 10.06.2026 |
| தீர்ப்பு பகரப்பட்ட நாள் | : | 10.06.2026 |
| தீர்மானம் | : | எதிரி சட்டப்பிரிவு 4(1)(C) of TNP Amendment Act–ன் கீழ் குற்றவாளி இல்லை. |
| முடிவு | : | இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP Amendment Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை சட்டப்பிரிவு 4(1)(C) of TNP Amendment Act–ன் கீழான கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை BNSS பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.<br>இவ்வழக்கில் PR No. 317/2025–ல் தாக்கல்செய்யப்பட்ட அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட 180 ml கொண்ட IMFL MCLENE BRANDY–08 பாட்டில்களில் உள்ள திரவத்தை அழித்தும், காலி பாட்டில்களை மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடப்படுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கு 29.10.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.P.கமலக்கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பும் கேட்டறிந்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:28:21 +0530

# தீர்ப்புரை

**ஈரோடு தெற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கையின் விவரம்:**

1. கடந்த 12.05.2025–ம் தேதி காலை 10.15 மணிக்கு ஈரோடு தெற்கு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட ஈரோடு சூரம்பட்டி வலசு, சாஸ்திரி சாலையில் பழனியப்பா திருமண மண்டபம் அருகே ருக்குமணி என்பவர் அரசு அனுமதியின்றி அரசு மதுபானமான 180ml அளவுள்ள IMFL MCLENE BRANDY–08 பாட்டில்களை தனக்கு சுயலாப நோக்குடன் அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக ஈரோடு தெற்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act–ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி குற்ற அறிக்கையை நன்கு பரிசீலித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act–ன் படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டு எதிரிக்கு அழைப்பானை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் BNSS பிரிவு 230–ன் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act–ன் படி குற்றச்சாட்டுக்கான முகாந்திரம் இருப்பது பற்றி BNSS பிரிவு 263–ன் படி எதிரியிடம் சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act–ன் கீழான குற்றச்சாட்டு வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 1–ஐ அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது.



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:28:27 +0530

6. **<u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சியங்களின் வாயிலாக புலப்படும் வாதத்தின் சுருக்கம்</u>**

6.1) அ.சா.1 திரு.கார்த்திக் தனது சாட்சியத்தில், கடந்த 12.05.2025 தேதியன்று காலைசட்டவிரோத மது விற்பனை லாட்டரி சீட்டு விற்பனை மற்றும் இதர குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு தானும், காவலர் அருண்குமார் என்பவரும் உதவி ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவருடன் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கண்காணித்துக் கொண்டிருந்தபோது, உதவி ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் ஈரோடு சூரம்பட்டி வலசு சாஸ்திரி சாலை, பழனியப்பா திருமண மண்டபம் அருகில் உள்ள காலியிடத்தில் கண்காணித்தபோது ஒரு பையில் ஏதோ வைத்துக்கொண்டு சந்தேகத்திற்கிடமாக எதிரி நின்றுகொண்டிருந்தார் என்றும், அவர் தங்களை பார்த்தவுடம் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து உதவி ஆய்வாளர் விசாரித்து அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்குபையில் அரசு மதுபானங்களான சுமார் 180 ml அளவுள்ள IMFL MCLENE BRANDY–08 பாட்டில்கள் (அ.தசா.பொ.1) இருந்தது என்றும், அவரை உதவி ஆய்வாளர் விசாரித்த போது, தனது சுயலாபம் கருதி டாஸ்மார்க் கடையில் இருந்து மதுபாட்டில்களை வாங்கி வந்து அதை அதிக விலை வைத்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் பிராந்தி பாட்டில்களை உதவி ஆய்வாளர் கைப்பற்றியதாகவும், அதில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் (அ.த.சா.ஆ.1) தன்னுடையது என்றும், பின்பு வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 திரு.தினேஷ்குமார், தனது சாட்சியத்தில், கடந்த 12.05.2025 தேதியன்று காலை 10.00 மணிக்கு சட்டவிரோத மது விற்பனை லாட்டரி சீட்டு விற்பனை மற்றும் இதர குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு தானும், காவலர்களும் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கண்காணித்துக் கொண்டிருந்தபோது தனக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் ஈரோடு சூரம்பட்டி வலசு சாஸ்திரி சாலை, பழனியப்பா திருமண மண்டபம் அருகில் உள்ள காலியிடத்தில் கண்காணித்தபோது ஒரு பையில் ஏதோ வைத்துக்கொண்டு சந்தேகத்திற்கிடமாக எதிரி நின்றுகொண்டிருந்தார் என்றும்,



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:28:32 +0530

எதிரி தங்களை பார்த்தவுடம் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்து அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கில் அரசு மதுபானங்களான சுமார் 180 ml அளவுள்ள IMFL MCLENE BRANDY–08 பாட்டில்கள் இருந்தது என்றும், அவரை விசாரித்த போது, தனது சுயலாபம் கருதி டாஸ்மார்க் கடையில் இருந்து மதுபாட்டில்களை வாங்கி வந்து அதை அதிக விலை வைத்து விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் பிராந்தி பாட்டில்களை கைப்பற்றியதாகவும், பின்னர் காவல்நிலையம் சென்று சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment ACT 2024 ன் படி முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.ஆ.2) பதிவு செய்தேன் என்றும், வழக்கு சொத்தை படிவம் 91 (அ.த.சா.ஆ.3) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், தனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment ACT 2024 ன் படி குற்ற அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிவடைந்தது.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவடைந்த பிறகு எதிரிக்கு பாதகமாக தோன்றக் கூடிய அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் கீழ் தொகுத்து வினவிய போது எதிரி அதனை மறுத்தார். எதிரி அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

8. தற்பொழுது இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

9. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ 3 வரையிலான சான்றாவணங்கள், அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:28:38 +0530

**<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்</u>:**

10. இருதரப்பும் கேட்கப்பட்டது வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. இனி இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினையானது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

12. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், அரசு தரப்பு சான்று பொருள் அ.த.சா.பொ.1 மூலமாகவும், அரசுதரப்பு தன் வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தண்டணை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. மாறாக, எதிரி தனது வாதத்தில், இவ்வழக்கில் பொது ஜன சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்றும், பொது ஜன சாட்சிகள் முன்னிலையில் எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், எதிரி மதுபானத்தை விற்பனை செய்ததாக அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், எதிரியை விடுதலை செய்யமாறும் வாதிட்டார்.

14. இவ்வழக்கில் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக அ.சா.1–ம், மற்றும் புலன் விசாரணை அதிகாரி அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

15. எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment ACT–ன் கீழான குற்றம் குறித்து பரிசீலிக்கும்போது, அரசு தரப்பு வழக்கின்படி, கடந்த 12.05.2025–ம் தேதி காலை 10.15 மணிக்கு ஈரோடு தெற்கு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட ஈரோடு சூரம்பட்டி வலசு, சாஸ்திரி சாலையில் பழனியப்பா திருமண மண்டபம் அருகே ருக்குமணி என்பவர் அரசு அனுமதியின்றி அரசு மதுபானமான 180ml அளவுள்ள IMFL MCLENE BRANDY–08



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:28:43 +0530

பாட்டில்களை தனக்கு சுயலாப நோக்குடன் அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்தார் என்பதேயாகும்.

16. எதிரி மீதான சட்டப்பிரிவு 4(1)(C) TNP ACT–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கும் போது, இவ்வழக்கில் நேரடி சாட்சி மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2–ன் சாட்சியத்தை பரிசீலிக்கும்போது, அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 12.05.2025–ம் தேதி மதுவிலக்கு தொடர்பாக குற்றங்களை கண்காணிக்கும் பொருட்டு தான், காவலர் கார்த்திக் (அ.சா.1) மற்றும் பெண் தலைமை காவலர் நிர்மலா ஆகியோருடன் ஈரோடு தெற்கு பகுதியில் ரோந்து பணியில் இருந்தபோது, ஈரோடு ஈரோடு சூரம்பட்டி வலசு, சாஸ்திரி சாலை, பழனியப்பா திருமண மண்டபம் அருகில் உள்ள காணியிடத்தில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, ருக்குமணி (எதிரி) போலீஸ் பார்ட்டியைக் கண்டவுடன் ஓடியதாகவும், ஓடிய நபரை பிடித்து விசாரித்ததாகவும், ருக்குமணி (எதிரி) வைத்திருந்திருந்த வெள்ளை நிற சாக்கை சோதனை செய்து பார்த்தபோது, அரசு மதுபானமான சுமார் 180 ML பிடிக்கக்கூடிய IMFL MCLENE BRANDY–08 பாட்டில்களை வைத்திருந்தார் என்றும், அது குறித்து விசாரிக்க அவர் தனது சுயலாபம் கருதி வாங்கி வந்து அதை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைது செய்ததாகவும், பின்னர் மேற்படி பாட்டிலைகளை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், பின்னர் நிலையம் ஆஜராகி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தாகவும், பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment ACT 2024–ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2–ன் சாட்சியத்தை ஒற்றியே அ.சா.1–ம் சாட்சியம் அளித்துள்ளார்.

17. ஒரு தனிநபர் 4.5 லிட்டர் அளவு இந்திய தயாரிப்பு மதுபானத்தை தன்வசம் வைத்துக்கொள்ளலாம் என



S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:28:48 +0530

“**G.O.Ms.No.75 PROHIBITION AND EXCISE DEPARTMENT DATED 16.04.1996, RULES 1996,**

> *Tamil Nadu Liquor (Possession for Person Consumption) has been framed and as per the table as amended by G.O.Ms.14 dated 09.06.2017, a person is entitled to possess* ***4.5 litres of Indian made foreign spirit,*** *4.5 litres of Foreign Liquor, 7.9 litres of Beer and 9 litres of Wine.”*

என தமிழ்நாடு அரசு அரசாணை பிற்பித்துள்ளது. இவ்வழக்கின் எதிரி மேற்படி அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவை விட குறைவாக அளவுள்ள spirit வைத்திருந்ததாகத்தான் அரசு தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி மதுபானங்களை எதிரி விற்பனை செய்ய வைத்திருந்ததாக சாட்சியங்கள் மூலம் தெரியவரவில்லை. மேற்படி அ.சா.1 மற்றும் அ.சா.2–ன் சாட்சியத்தின் மூலம் சம்பவ இடமானது பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்பது தெரியவருகிறது. பொதுமக்கள் யாரையும் சாட்சிகளாக விசாரணை செய்யாததற்கு ஏற்றுக்கொள்ளும்படியான காரணங்கள் தெரிவிக்கப்படாத நிலையில், அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே மேற்படி பரிசீலினையில் இருந்து உண்மையில் எதிரியிடம் இருந்து மேற்படி மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதா என்பது குறித்து சந்தேகம் எழுகிறது. மேலும், மேற்படி மதுபானங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதற்காக எதிரி வைத்திருந்ததாகவோ, அவரிடம் இருந்து மேற்படி மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாகவோ நிரூபணமாகாத நிலையில், எதிரி மீதான குற்றச்சாட்டு எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18. இறுதியாக, எதிரி மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP Amendment Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை சட்டப்பிரிவு 4(1)(C) of TNP Amendment Act–ன் கீழான கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரியை



S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:28:53 +0530

BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

19. எதிரி பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

20. இவ்வழக்கில் PR No. 317/2025-ல் தாக்கல்செய்யப்பட்ட அ.த.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்ட 180 ml கொண்ட IMFL MCLENE BRANDY-08 பாட்டில்களில் உள்ள திரவத்தை அழித்தும், காலி பாட்டில்களை **மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பின் அரசுக்கு ஆதாயமாக்க உத்தரவிடப்படுகிறது.** மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.06.10 13:28:58 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,
ஈரோடு.

| **இணைப்பு :** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சாட்சிகள் :-** | | |
| **அரசு தரப்பு சாட்சி எண்.** | **பெயர்** | **எவ்வகையான சாட்சி** |
| அ.சா.1 | திரு. கார்த்திக் | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.2 | திரு. தினேஷ்குமார், உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

| **அரசு தரப்பு சான்றாவணங்கள்.** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்றாவணம் எண்.** | **எவ்வகை ஆவணம்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
| அ.த.சா.ஆ.1 | 12.05.2025-ம் தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1 சாட்சி கையொப்பம் | அ.சா.1 |
| அ.த.சா.ஆ.2 | 12.05.2025-ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.த.சா.ஆ.3 | 12.05.2025-ம் தேதியிட்ட படிவம் 91 | அ.சா.2 |

| **<u>அரசு தரப்பு சான்று பொருள்:–</u>** | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்று பொருள்** | **எவ்வகை சான்று பொருள்** | **யார் மூலம் குறியீடு செய்யப்பட்டது** |
| அ.த.சா.பொ.1 | 180 ml கொண்ட IMFL MCLENE BRANDY–08 | அ.சா.1 |
| **<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> :–** இல்லை | | |
| **<u>குறிப்பு:–</u>** | | |
| 1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார். | | |
| 2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை. | | |
| 3) வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. S R BABU Digitally signed by S R BABU Date: 2026.06.10 13:29:04 +0530 நீதித்துறை நடுவர் எண்.3, ஈரோடு. | | |